பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 12 2024 **MONDAY** 6 45 **AM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், அரசு பணிகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 71 ஆயிரம் பேருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பணி ஆணைகளை வழங்குகிறார்.

2. இந்திய பங்குச் சந்தைகளில் இந்த ஆண்டு மட்டும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. இந்திய நாட்டிய விழா மாமல்லபுரத்தில் நேற்று தொடங்கியது.

4. சேலம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு புதிய திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

5. வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 211 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>>><<<<<<

மத்திய அரசின் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், அரசு பணிகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 71 ஆயிரம் பேருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக பணி ஆணைகளை வழங்குகிறார்.

பின்னர், புதிதாக பணியில் சேர்ந்தவர்களிடம் அவர் உரையாடுகிறார்.

இதற்கான நிகழ்ச்சிகள் இன்று நாடுமுழுவதும் 45 இடங்களில் நடைபெறுகின்றன.

அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள இடங்களுக்கு தகுதியான நபர்கள் மத்திய அரசு தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் 2022-ம் ஆண்டு முதல் அரசு பணிகளில் லட்சக்கணக்கானோர் இணைந்துள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளம் பணியாளர்கள், உள்துறை அமைச்சகம், உயர்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் குடும்பநல அமைச்சகம், நிதித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்ற உள்ளனர்.

**>>>>>><<<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய கத்தோலிக்க பிஷப் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் இன்று பங்கேற்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்களை அவர் சந்தித்து உரையாடுகிறார்.

கிறிஸ்தவ தேவாலயங்களின் **Cardinals, Bishops** ஆகியோரையும் அவர் சந்தித்து பேசுகிறார்.

முதல்முறையாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

**>>>>>><<<<<<**

இந்திய பங்குச் சந்தைகளில் டிசம்பர் மாதத்தில் 26 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்திய பங்குச் சந்தைகளில் 21 ஆயிரத்து 789 கோடி ரூபாயும், இந்த கடன் சந்தைகளில் 4 ஆயிரத்து 646 கோடி ரூபாயும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் மாதத்தில் மட்டும் மொத்தம் 26 ஆயிரத்து 435 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் இந்திய பங்குச் சந்தைகளில் 57 ஆயிரத்து 724 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டது.

மொத்தத்தில் இந்த ஆண்டு மட்டும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இந்திய பங்குச் சந்தைகளில் அந்நிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

சேலம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் பல்வேறு புதிய திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் சிப்காட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு ஜாகிர் அம்மாப்பாளையத்தில் 120 ஏக்கர் பரப்பளவிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நிலத்தை அவர் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இங்கு அமையவிருக்கும் ஜவுளிப் பூங்காவில் நூல் பதனிடுதல், கஞ்சி தோய்த்தல், நெசவு, ஜவுளி உற்பத்தி, துணி பதனிடுதல் ஆகியவை நடைபெறும் என்றும் இதன்மூலம் ஆயத்த ஆடை உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பயனடைவார்கள் என்றும் தெரிவித்தார்.

ஜவுளிப் பூங்கா அமைப்பதன் மூலம் சேலம் மண்டலத்தில் சுமார் பத்தாயிரம் பேர் நேரடியாகவும், 40 ஆயிரம் பேர் மறைமுகமாகவும் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

ஓமலூர் வட்டத்தில் அமைந்துள்ள சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ள மினி டைடல் பூங்காவினையும் அமைச்சர் பார்வையிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் பொங்கல் தொகுப்பு வழங்குவதற்கான கரும்பு, அரிசி உள்ளிட்ட பொருட்களின் கொள்முதல் பணிகள் நடைபெற்று வருவதாக உணவு மற்றும் கூட்டுறவுத்துறை செயலாளர் திரு. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

நாகையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொங்கல் தொகுப்பு வழங்குவது குறித்து முதலமைச்சரின் அறிவிப்பு வந்தவுடன் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்..

(சவுண்ட்பைட் – ராதாகிருஷ்ணன் 18 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

செங்கற்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் தமிழக சுற்றுலாத்துறை சார்பில் ஆண்டுதோறும் இந்திய நாட்டிய விழா நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான நாட்டிய விழா நேற்று தொடங்கியது.

இதனை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்.

இந்த நாட்டிய விழா, அடுத்த மாதம் 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்ச்சியில் தமிழகத்தின் பாரம்பரிய நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் திரு. அருண் ராஜ், இந்த ஆண்டு மட்டும் இதுவரை ஒரு லட்சத்து 30 ஆயிரம் வெளிநாட்டு பயணிகள் மாமல்லபுரம் வந்து சென்றுள்ளதாக தெரிவித்தார்.

இந்த விழாவில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களது கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நிலவும் இதமான காலநிலையை ரசிப்பதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களில் கர்நாடகா மற்றும் கேரள மாநில சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

பிரேஸிலில் பேருந்தும் - டிரக்கும் நேருக்கு நேராக மோதிய சாலை விபத்தில் 38 பேர் உயிரிழந்தனர். 13 பேர் பலத்த காயமடைந்தனர்.

>>>>>><<<<<<

காஸா பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 32 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும், 54 பேர் பலத்த காயமடைந்ததாகவும் காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

திரிபுராவின் தலாய் பகுதியில் 668 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தேசிய அளவிலான பாலினப் பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் திருவண்ணாமலையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஆட்சியர் திரு. பாஸ்கரபாண்டியன் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

தருமபுரி நான்கு சாலை சந்திப்பில், தலைக்கவசம் அணிந்து சென்ற இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசுகளை காவல்துறையினரும், சமூக ஆர்வலர்களும் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

>>>>>><<<<<<

கேரளாவிலிருந்து மருத்துவ கழிவுகள் நெல்லை மாவட்டத்தில், கொட்டப்பட்டதை அடுத்து கேரள அரசு 18 லாரிகளில் கழிவுகளை திருப்பி எடுத்துச் சென்றது..

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் யானை தந்தங்களை விற்பனை செய்ய முயன்ற 7 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

சென்னை, திருவான்மியூர் கடற்கரையில் **Live Green – Love Blue** என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்துடன் இசை வீதி விழா நடைபெற்றது. இதில் சென்னை மேயர் திருமதி. ஆர். பிரியா கலந்து கொண்டார்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல்லில் நூற்றுக்கணக்கான கிறிஸ்துமஸ் தாத்தாக்கள் பங்கேற்ற கண்கவர் ஊர்வலம் மற்றும் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 211 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வதோதராவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 314 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Smriti Mandhana** 91 ரன் எடுத்தார்.

315 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ், தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கி, 26 புள்ளி இரண்டு ஓவரில் 103 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

**Renuka Singh** அபாரமாக பந்துவீசி, 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம், நாளை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் தமிழக அணி – பெங்களூரு அணியையும், ஹரியானா – மும்பை அணியையும் வென்றன.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் குஜராத் - தில்லி அணியையும், புனே – தமிழக அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>><<<<<<

திருவண்ணாமலையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கராத்தே போட்டிகளில் 600க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

ஐந்து பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் அடுத்த மாதம் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

>>>>>>END<<<<<<